DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.103/12

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name ராஜாராம் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஸ்ரீரங்கபுரத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்துவருகிறேன். எனக்கு 1ம் எதிரியை தெரியும் மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. அசா1 ஐ எனக்கு தெரியும். கடந்த 2009ம் ஆண்டு ஒரு நாள் காலை சுமார் 10 மணிக்கு ஊஞ்சாம்பட்டியில் உள்ள இடத்திற்கு சென்றேன். அது எந்த இடம் என்று நினைவில் இல்லை. அசா1 என்னை அழைத்து சென்றார். அப்போதுஅங்கு போஸ்ம் அவர் சகோதரர் இரண்டு பேரும் அங்கு இருந்தார்கள். அவர்கள் 3 பேரும் கம்பை வைத்துக்கொண்டு இங்கே வரவேண்டாம் என்று விரட்டிவிட்டார்கள். நான்,கோதையம்மாள், கோபாலு, விஜயலட்சுமி மற்றும் சிலரும் அங்கிருந்தோம். நாங்கள் உடனடியாக தேனி மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள் நான் நடந்ததை சொன்னேன்.

குறுக்கு விசாரணை

தாவா நிலத்தை கிரயம் வாங்கும் போது நான் உடனில்லை என்றால் சரிதான். சொத்தின் சர்வேஎண் அளவு எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராஜகோபால் மனைவி வாசுகி மேற்படி சொத்தை கிரயம் வாங்கிய விபரம் எனக்கு தெரியாது. வாசுகி கோதையம்மாளுக்கு பவர் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. எதிரிகள் சொத்தை வேற நபருக்கு விற்பனை செய்த விபரம் தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் யாரின் வாரிசு என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரிக்கும் போது எனக்கு எதுவும் தெரியாது என்று தான் சொல்லியுள்ளேன். போலிசாரிடம் கம்பை வைத்து விரட்டிய சம்பவத்தை பற்றி தான் சொன்னேன். வேறு எதுவும் சொல்லவில்லை. போலிசார் விசாரிக்கும் போது எதிரிகள் இந்த சொத்தை வேறு நபருக்கு கிரயம் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.